# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்: 027/2019/பே**
**ஆணை நாள் 05–08–2019**

திரு. K.R. நடராஜன்,
212, 6–வது கிராஸ்,
ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர்,
செம்பாக்கம்,
சென்னை – 600 073. -- முறையீட்டு மனுதாரர்.

திரு. D.குணசேகரன்,
செயல் அலுவலர்,
மாங்காடு பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

**ஆணை.**

சென்னை, செம்பாக்கம், 6–வது கிராஸ், ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர், எண்.212, என்ற முகவரியில் வசிக்கும் திரு. கே.ஆர்.நடராஜன் என்பவரது 12.02.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.02.2019 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.027/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், செம்பாக்கம் பேரூராட்சியாக இருந்த காலத்தில் மேற்படி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திரு.D.குணசேகரன் என்பவர் மேற்படி பேரூராட்சியில் ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர் என்ற மனைப்பிரிவு உரிமையாளருக்கு முறைகேடாக கீழ்க்கண்ட இரு சான்றுகளை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

(i) 12.11.2008 நாளிட்ட எண்ணிடப்படாத பணி முடிவு குறித்த சான்றிதழ்
(ii) சான்று ந.க.எண். 811/2011 நாள்.16.12.2011

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் 03.11.2008 நாளிட்ட கடிதத்தில் மேற்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மேற்படி நிறுவனம் சமூக நலக்கூடம், விருந்தினர் மாளிகை, கிளை அலுவலகம் என பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் முறைகேடாகக் கட்டியுள்ள கட்டிடங்களை அகற்றி பேரூராட்சியால் வசூலிக்கப்படும் மாத வாடகையினை உடனடியாக நிறுத்தவும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கு பின்னர், பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்படி மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைகளுக்கு மாறாக வ.எண். ஒன்றில் குறிப்பிட்டுள்ள 12.11.2008 நாளிட்ட சான்று வழங்கப்பட்டுள்ளது என முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி பணி முடித்தமைக்கான சான்றினை வழங்குவதற்கு முன்பு பேரூராட்சி

செயல் அலுவலர் திரு. D. குணசேகரன் சட்ட விதிகள் மற்றும் கட்டிட விதிகளின்படி விதி மீறல்கள் ஏதுமின்றி கட்டுமானங்கள் அமைந்துள்ளனவா என்பதை முறையாகப் பரிசீலித்து உறுதி செய்யாமல் தனது கடமையிலிருந்து தவறியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

வ.எண். இரண்டில் உள்ள 16.11.2011 நாளிட்ட சான்றில் மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொதுப்பயன்பாட்டிற்கான 5.624 சதுர மீட்டர் பரப்பளவிலான இடம் (கட்டிடத்துடன் கூடியது) ஹெரிடேஜ் ப்ராப்பர்ட்டி நிறுவனத்தால் தாம்பரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2481/2003, நாள்.22.04.2003ன்படி தானப்பத்திரம் மூலமாக பதிவு செய்யப்பட்டு, செம்பாக்கம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதாகவும், மேற்படி இடத்தில் குழந்தைகள் விளையாடுமிடம், குழந்தைகள் காப்பகம், கூடைப்பந்து, பூப்பந்து, கைப்பந்து விளையாடுவதற்கான இடம் மற்றும் உள் விளையாட்டரங்கத்திற்கான இடம், திறந்தவெளி கூட்டரங்கம், சமூக நலக்கூடம், சங்க அலுவலகம், மனமகிழ் மன்றம் (கிளப் அவுஸ்) மற்றும் பூங்கா போன்ற வசதிகள் மேற்படி மனைப்பிரிவில் ஏற்படுத்தும் பொருட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக செயல் அலுவலரால் தானப்பத்திர ஆவணங்களுக்கு முரணாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் முறையீட்டு மனுதாரரால் புகார் எழுப்பப்பட்டுள்ளது. பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட மேற்படி பொதுப்பயன்பாட்டிற்கான இடம் மட்டுமே மேற்படி தானப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முறையீட்டு மனுதாரர் செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் 28.04.2009 நாளிட்ட செயல்முறைகளின்படி, மேற்படி பொதுப்பயன்பாட்டிற்கான இடத்தினை M/s பிரக்கிரிதி பவுண்டேஷன் லிமிடெட், என்ற நிறுவனத்திற்கு மாத வாடகைக்கு குத்தகைக்கு விடப்பட்டதை ரத்து செய்து, மேற்படி திறந்த வெளி பயன்பாடு நிலத்தினை பேரூராட்சி வசம் திருப்பி எடுத்துக் கொள்ள உத்திரவிடப்பட்டுள்ள நிலையிலும், பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.279/நாள்.07.09.2009ன்படி மேற்படி குத்தகை ரத்து செய்த உத்திரவிற்கு பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பொதுப்பயன்பாட்டிற்கான பூங்காவில் உள்ள கட்டிடங்களையும் பேரூராட்சி எடுத்து பராமரிக்கவும் தீர்மானம் இயற்றப்பட்டுள்ள நிலையிலும், செயல் அலுவலர் திரு.டி.குணசேகரன் 16.12.2011 நாளிட்ட சான்றினை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது விதிகளுக்கு புறம்பானதாகும் என முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி செயல் அலுவலர் மேற்படி மனைப்பிரிவில் உள்ள ஆக்கிரமிப்புக் கட்டிடங்களை அகற்றிடவும், குத்தகையினை ரத்து செய்யவும், மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்ட 03.11.2008 நாளிட்ட உத்திரவினையும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அவர்களால் பூங்காவில் உள்ள முறையற்ற கட்டுமானங்களை அகற்றுவது தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட ஆணைகளையும், பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களது சுற்றறிக்கைகள் மற்றும் ஆணைகளையும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை(நிலை) எண்.134/நாள்.20.09.2002ன்படி மனைப்பிரிவு அங்கீகாரத்தின் போது கடைபிடிக்கப்படவேண்டிய வழிகாட்டுதல்கள் தொடர்பான அரசாணைகளையும் கடைபிடிக்கத் தவறியுள்ளார் எனவும், வீட்டு உரிமையாளர்கள் சங்கத்திலிருந்து மேற்படி பூங்கா குறித்தும், குத்தகை ரத்து செய்வது குறித்தும் மற்றும் பிற பொருட்கள் குறித்தும் வழங்கப்பட்ட முறையீடுகளின் மீது அரசாணைகளின்படி மேற்படி செயல் அலுவலரால் முறையாக தீர்வு காணப்படவில்லை எனவும் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே புகாருக்குட்பட்ட செயல் அலுவலர் திரு.டி.குணசேகரன், மனைப்பிரிவு அபிவிருத்தியாளரின் விதி மீறல்கள் குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய கடமைகளிலிருந்து தவறியமைக்காகவும், தவறான மேற்குறிப்பிட்ட சான்றுகளை வழங்கியமைக்காகவும் மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு.353ன் படி பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை பாதுகாக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவும் தவறியமைக்காகவும் மேற்படி செயல் அலுவலர் மீது தக்க துறை வாரியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென முறையீட்டு மனுதாரர் முறையீடு செய்துள்ளார்.

செம்பாக்கம் பேரூராட்சி நகராட்சியாக மாற்றப்பட்ட பின்னர் 24.02.2016 அன்று மேற்படி மனைப்பிரிவில் பூங்காவிற்கான பொதுப் பயன்பாடு இடத்தில் கட்டப்பட்டிருந்த விதி மீறிய கட்டுமானங்கள் நகராட்சியால் அகற்றப்பட்டதை எதிர்த்து பிரிக்ருதி பவுண்டேஷன் நிறுவனத்தின் பொது அதிகாரம் பெற்ற முகமை நிறுவனமான ஹெரிடேஜ் பிராப்ரட்டீஸ் டெவலப்மெண்ட் என்ற நிறுவனம் மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில் (நீதிப்பேராணை எண் 9245/2017) மேற்குறிப்பிட்டவாறான செயல்

அலுவலரால் வழங்கப்பட்ட சான்றுகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் வழக்கின் ஆதார ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டு, நகராட்சியால் அப்புறப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் மீண்டும் கட்டித்தரப்படவேண்டும் என சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் கோரிக்கை வைக்கப்பட்டதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

21.02.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 18.03.2019 அன்று ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.கே.ஆர்.நடராஜன் தனது வாக்குமூலத்தில், தற்போது பெருங்களத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரியும் திரு.டி.குணசேகரன் என்பவர் மேற்படி குற்றம் நடந்தபோது செம்பாக்கம் பேரூராட்சியின் செயல் அலுவலராகப் பணிபுரிந்ததாகவும், செம்பாக்கம் பேரூராட்சியில் ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர் என்ற பகுதியில் நிலங்கள் மனைகளாகப் பிரிக்கப்பட்டு ஹெரிடேஜ் பிராப்பர்டி டெவலப்பர்ஸ் (Heritage Property Developers) என்ற கட்டிட ஒப்பந்ததாரரால் மொத்தம் 278 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும், இந்தக் குடியிருப்பு மனை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும்போது 3 இடங்களில் பூங்கா அமைப்பதற்கு பொதுப்பயன்பாட்டிற்கான நிலம் ஒதுக்கப்பட்டதாகவும், மனைகள் அங்கீகாரம் பெறப்பட்டவுடன் பொதுப் பயன்பாட்டிற்கு ஒதுக்கிய நிலங்களை செம்பாக்கம் பேரூராட்சிக்கு தாம்பரம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண். 2481/2003 ன்படி பதிவு செய்யப்பட்ட தானப் பத்திரம் மூலம் வழங்கப்பட்டதாகவும், பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட பகுதியில் உள்ள பூங்கா பகுதியினை தானமாக எழுதிக் கொடுத்தவருக்கே குத்தகைக்கு காலம் ஏதும் குறிப்பிடாமல் பேரூராட்சி வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார். குத்தகை ஆவணம் பதிவு செய்யாத நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் குத்தகையை ரத்து செய்ததுடன் ஆக்கிரமிப்புக் கட்டிடங்களை அகற்றிடவும் ஆணையிட்டதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்டிடம் கட்டிய ஒப்பந்ததாரர் பூங்கா அமைகின்ற இடத்தில் கட்டிடம் அமைந்துள்ளது குறித்து புகார் கிடைத்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கை எடுத்த பின்னர் தற்போது பழைய கட்டிடம் மட்டும் இடிக்கப்பட்டுள்ளதாகவும், மற்றுமொரு கட்டிடம் இடிக்கப்படாமல் உள்ளதாகவும், இதற்கு அப்போதைய செயல் அலுவலராக இருந்த திரு.டி.குணசேகரன் என்பவர் பணி முடித்த சான்று ஒன்றினை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 12.11.2008ல் வழங்கியுள்ளதாகவும், பணிகள் முழுவதும் முடிவடையாமல் உள்ள நிலையிலும், குழந்தைகள் விளையாடும் இடம், கூடைப்பந்து, பூப்பந்து உள் விளையாட்டரங்கம், பூங்கா போன்ற பல வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் தானப் பத்திரம் மூலம் வழங்கப்பட்டுவிட்டதாக ஒரு பொய்யான சான்றினையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தானப்பத்திரத்தில் இவ்வாறான வசதிகளுக்காக வழங்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லையெனவும், மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவல்களுக்கு தனக்கு அளிக்கப்பட்ட 26.03.2012 நாளிட்ட கடிதத்தில் நிதி கையிருப்பிற்குத் தகுந்தவாறு பூங்கா அமைத்துத் தரப்படும் எனக் குறிப்பிட்டுப் பதில் அளித்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேலும், முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தான் போலி சான்றிதழ் வழங்கியதாக குறிப்பிடுவது, மேற்குறிப்பிட்ட 2008 மற்றும் 2011ல் அப்போதைய செயல் அலுவலர் திரு.டி.குணசேகரன் என்பவரால் வழங்கப்பட்ட சான்றுகள் எனவும், அப்போதைய செயல் அலுவலர் திரு.டி.குணசேகரன் என்பவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளக் கேட்டுக் கொண்டும், இது சம்பந்தமாக நியாயம் கிடைக்காததால் தேசிய நுர்வோர் மேல் முறையீட்டு மன்றத்தில் வழக்கு எண்.CC.54/2012 ல் தொடர்ந்து மேற்படி வழக்கு நிலுவையாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

22.03.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 25.04.2019 அன்று ஆஜரான முன்னாள் செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரும், தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலருமான திரு.டி.குணசேகரன் மேற்படி பொருள் தொடர்பாக பதிவு செய்த தனது வாக்குமூலத்தில், தான் 11.02.2019 முதல் மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், 2008–ஆம் ஆண்டு செம்பாக்கம் பேரூராட்சியாக இருந்தபோது தான் செயல் அலுவலராக ஓராண்டு காலம் பணிபுரிந்ததாகவும், முறையீட்டு மனுதாரர் திரு.கே.ஆர்.நடராஜன் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சில தகவல்களைக் கோருவார் எனவும், கோரும் தகவல்களை தான் அவ்வப்போது அளித்துள்ளதாகவும், தான் செம்பாக்கம் பேரூராட்சியில் பணிபுரிந்தபோது முறையீட்டு

மனுதாரரால் எவ்வித வழக்கும் போடப்படவில்லை எனவும், பூங்கா சம்பந்தமாக முறையீட்டு மனுதாரர் மனு அளித்ததாகவும் தெரிவித்துள்ளார். ஜெயேந்திரா நகர் மனைப்பிரிவில் உள்ள பூங்கா ஹெரிடேஜ் ப்ராப்பர்டீஸ் டெவலப்பர்ஸ்க்கு குத்தகைக்கு விடப்பட்டபோது, தனக்கு முன் இருந்த செயல் அலுவலர் திரு.டி.என்.கமல்ராஜ் என்பவர் பணிபுரிந்ததாகவும், அவருடைய பணிக்காலத்தில் ஹெரிடேஜ் பிராப்பர்டீஸ் டெவலப்பர்ஸ் என்ற மனை விற்பனையாளருக்கு பொது உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பூங்கா நிலங்களை பேரூராட்சி சார்பாக காலம் குறிப்பிடப்படாத குத்தகை ஆவணம் மூலம் குத்தகைக்கு விட்டிருந்ததாகவும், அதன் மூலம் மாதம் ரூ.5,000/– பேரூராட்சிக்கு சம்பந்தப்பட்ட குத்தகைதாரரிடமிருந்து குத்தகைத் தொகையாக வசூலிக்கப்பட்டு வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். தான் பணியேற்றவுடன் குத்தகை விடுவது குறித்து மனுதாரர் புகார் செய்ததால் அதன் அடிப்படையில் தனக்கு முந்தைய செயல் அலுவலர் கொடுத்த குத்தகை ஆவணத்தினை ரத்து செய்து மீண்டும் பேரூராட்சிக்கே மேற்படி பொதுப் பயன்பாட்டு நிலம் ஒப்படைக்கப்பட்டது எனவும், மேலும் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் தன் மீது பேரூராட்சிகளின் இயக்குநரகத்திற்கு புகார் அனுப்பியதற்குப் பதிலறிக்கையாக வழங்கப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

25.04.2019 நாளிட்ட வாக்குமூல நகலினை 10.07.2019 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இதன் மீதான இறுதியான விளக்கம்/ஆட்சேபணையினை ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்க ஆணையிடப்பட்டது. 25.07.2019 நாளிட்ட முறையீட்டு மனுதாரரின் ஆட்சேபணை/விளக்க கடிதத்தில் முன்னாள் செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.டி.குணசேகரன் தனது வாக்குமூலத்தில் மேற்படி செம்பாக்கம் பேரூராட்சியில் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள அனுமதியற்ற கட்டிடங்களை வாடகை விட்டது தொடர்பான உத்திரவினை 28.04.2009ல் தான் ரத்து செய்ததாக தவறான தகவலை முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ளதாகவும், மேற்படி செயல் அலுவலர் செம்பாக்கம் பேரூராட்சியில் 4/2008 முதல் 11/2008 வரையிலும், இரண்டாவது முறையாக செப்டம்பர், 2011 முதல் ஜூலை,2012 வரையில் செயல்அலுவலராக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரரான முன்னாள் செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரும் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலருமான திரு.டி.குணசேகரன், செயல் அலுவலரின் வாக்குமூலம், 25.07.2019 நாளிட்ட முறையீட்டு மனுதாரரின் ஆட்சேபணை/விளக்கக் கடிதம் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேற்படி ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர் மனைப்பிரிவில் பொது திறவிட பகுதியில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட பகுதியினை மேற்படி நகர் வீட்டு உரிமையாளர்கள் பயன்பெறும் வண்ணம் பூங்காவாக பராமரித்து வழங்க ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர் வீட்டு உரிமையாளர் சங்க செயலாளர் திரு.ஜி.வெங்கடாச்சாரி என்பவரால் 18.08.2008 மற்றும் 30.10.2008 ஆகிய தேதிகளில் செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு கோரிக்கையாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பின்னர் மேற்படி ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர் வீட்டு உரிமையாளர் நலச் சங்க செயலாளராக இருந்த திருமதி.பொன்னம்மாள் நடராஜன். (முறையீட்டு மனுதாரர் திரு.கே.ஆர்.நடராஜன் எனபவரின் மனைவி) என்பவர் தனது 09.07.2009 நாளிட்ட கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவில் உள்ள பூங்கவிற்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளை மேற்படி பகுதியில் உள்ள தேவையற்ற பொருட்களை சம்பந்தப்பட்ட உபயோகிப்பாளரால் அகற்றப்பட்ட பின்னர் தங்கள் சங்கத்திற்கு வழங்கிடுமாறும், அப்பகுதியிலுள்ள மூன்று பூங்காப் பகுதிகளையும் தங்களுக்கு வழங்கிடுமாறும் கோரிக்கை விடுத்து செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு கடிதம் எழுதியுள்ளார். இவ்விவரத்தினை முறையீட்டு மனுதாரரும் இம்முறைமன்ற நடுவத்தில் 23.04.2019 அன்று தான் அளித்த வாக்குமூலத்தில் உறுதி செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் 14.10.2009 நாளிட்ட கடிதத்தில் செம்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர் மனைப்பிரிவில் அமைந்துள்ள திறந்தவெளி நிலப்பகுதி மற்றும் பூங்காவிற்காக

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் 5,624 சதுர மீட்டர் நிலப்பகுதியினை பிரக்கிருதி பவுண்டேஷனுக்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டதை பேரூராட்சி மூலம் ரத்து செய்யப்பட்டு, பேரூராட்சி மூலம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாக தெரிவித்தும் பேரூராட்சி தீர்மான எண்.279/நாள் 07.09.2009ல் குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்ததை ஒப்புதல் செய்து தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு, மேற்படி சங்க செயலாளரின் கோரிக்கையின்படி பூங்கா இடத்தினை ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர் குடியிருப்போர் நலச் சங்கத்திற்கு ஒப்படைக்க வழிவகை இல்லை என்ற விவரம் மேற்படி நகர் சங்க செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுப்பயன்பாட்டிற்கான பூங்கா இடத்தினை மாத வாடகைக்கு குத்தகைக்கு விடப்பட்டதே ஆட்சேபணைக்குரியதென ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி பொதுப் பயன்பாட்டிற்கான பூங்கா இடம் மற்றும் பிற இரண்டு பூங்கா இடங்களையும் தங்கள் சங்கத்திற்கே வழங்கிடுமாறு சம்பந்தப்பட்ட சங்கத்தாரால் கோரிக்கை விடப்பட்டது சட்டத்திற்கு புறம்பானதாகும். மேலும் அவ்வறான கோரிக்கை ஏற்கப்பட்டிருப்பின் பேரூராட்சிக்கு முற்றிலும் இழப்பீடாக அமைந்திருக்கக்கூடும்.

முன்னாள் செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்ட 16.12.2011 நாளிட்ட சான்றில், மனைப்பிரிவில் உள்ள பொதுப்பயன்பாட்டிற்கான இடம் பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட தானப்பத்திரத்தில் குறிப்பிடப்படாத கட்டிடங்களை குறிப்பிட்டு முறைகேடாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட புகார் குறித்து ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அவ்வாறு பரிசீலித்ததில் மேற்படி செம்பாக்கம் பேரூராட்சி மூலம் 07.09.2009ல் இயற்றப்பட்ட தீர்மான எண்.279ல் M/s. பிரக்ரிதி பவுண்டேஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு செம்பாக்கம் பேரூராட்சிக்கு சொந்தமான நில அளவை எண்.149 மற்றும் 150ல் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தினை குத்தகைக்கு விடப்பட்டதை பேரூராட்சி செயல் அலுவலரின் உத்திரவு ந.க.எண்.455/2002/நாள் 28.04.2009ன்படி ரத்து செய்தும் பேரூராட்சி வசம் எடுத்துக் கொள்ளவும், மேலும் மேற்படி பூங்காவில் உள்ள கட்டிடங்களையும் பேரூராட்சி வசம் எடுத்துக் கொண்டு பழுது பார்த்து பேரூராட்சி மூலம் பராமரிக்க தீர்மானம் இயற்றியுள்ளதின் மூலம் மேற்படி பொதுத் திறவிடம் கட்டிடங்களை உள்ளடக்கி இருந்துள்ளது மன்றத்தின் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது புலனாகிறது.

மேலும் செயல் அலுவலரால் வழங்கிய 16.12.2011 நாளிட்ட சான்றுதான் மேற்படி திறவிடத்தினை பயன்படுத்தி வந்த பிரக்கிரிதி பவுண்டேஷன் நிறுவனம் மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர அடிப்படை ஆதாரமாக அமைந்தது என்ற புகார் குறித்து பரிசீலித்ததில், மேற்படி நிறுவனம் மூலம் தொடரப்பட்ட மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற நீதிப்பேராணை எண்.9245/2017க்கான வழக்கு தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசு வழக்குரைஞரது வாதுரையில் (பத்தி 4.7)ல் மேற்படி செம்பாக்கம் முன்னாள் செயல் அலுவலரால் 16.12.2011ல் வழங்கப்பட்ட சான்று மேற்படி நிறுவனத்துடனான வாடகை ஒப்பந்தம் ஏப்ரல், 2009ல் ரத்து செய்யப்பட்ட நிலையில் இச்சான்று தொடர்பற்றதாக வாதிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற 03.01.2019 நாளிட்ட ஆணையில் மேற்படி பொதுப்பயன்பாட்டிற்கான இட குத்தகை ஏப்ரல்,2009ல் ரத்து செய்யப்பட்ட நிலையிலும், மேற்படி இடம் மற்றும் கட்டிடங்களின் உரிமை நீதிப்பேராணை மனுதாரரால் 04.04.2009ல் ஒப்படைக்கப்பட்டு 11.04.2009ல் உள்ளாட்சி அமைப்பினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிலையிலும் மேற்படி வழக்கின் மூன்றாவது எதிர்மனுதாரராகிய நகராட்சி ஆணையரால் 24.02.2016ல் மேற்படி இடத்தில் இருந்த கட்டுமானங்களை அகற்றியதை தவறாக கருதிட இயலாது என்றும் இதில் சட்ட முரண்பாடுகள் ஏதுமில்லை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி புகாருக்குட்பட்ட சான்றுகள் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தியதாக மாண்பமை நீதிமன்றத்தால் பகரப்படவில்லை.

மேலும் முன்னாள் செம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்ட இச்சான்றுகளால் அரசுக்கோ, நிர்வாகத்திற்கோ எவ்வித இழப்பீடும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படவில்லை. மேலும் இச்சான்றுகளால் தனி நபர் எவருக்கும் எவ்வித அனுகூலமும் ஏற்பட்டதாகவும் நிரூபிக்கப்படவில்லை. மேற்படி சான்றுகள் நிர்வாக ரீதியாக அன்றைய தேவைக்கேற்ப வழங்கப்பட்டுள்ளதாகவே சம்பந்தப்பட்ட செயல் அலுவலரால் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (c) ன்படி ஒரு முறையீட்டில் கூறப்படும் நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்திருப்பின் அப்பொருட்பாடுகள் எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது. எனவே இம்முறையீட்டில் 'குறிப்பிட்டுள்ள சான்றுகள் வழங்கப்பட்ட நிகழ்வுகள் 2008 மற்றும் 2011 ஆண்டுகளில் நடைபெற்று ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்டுள்ள நிலையில் மேற்குறிப்பிட்ட சட்டப் பிரிவுகளின்படி காலம் கடந்த நிகழ்வுகள்/பொருட்பாடுகள் குறித்து இம்முறையீட்டு மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவம் தொடர் விசாரணை மேற்கொண்டு ஆணை பிறப்பிக்க ஏதுமில்லை எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும் ஆவணங்களை பரிசீலித்த வகையில் திரு எம்.வெங்கடேஷ், முன்னாள் செம்பாக்கம் செயல் அலுவலரால் (தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர்) மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள திறந்தவெளி நிலப்பகுதியினை குத்தகைக்கு விடப்பட்டிருந்ததை 28.04.2009 அன்று ரத்து செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், திரு.டி.குணசேகரன், மேற்படி பொருள் தொடர்பான தனது 25.04.2019 நாளிட்ட வாக்குமூலத்தில், தான் மேற்படி திறந்தவெளி இட வாடகை சம்பந்தமான குத்தகையினை ரத்து செய்ததாகத் தெரிவித்துள்ளமை சரியான தகவல் அல்ல என்பதை சுட்டிக்காட்ட இம்முறைமன்ற நடுவம் விரும்புகிறது. இது போன்று தவறான தகவல்கள் அளிப்பதை எதிர் காலத்தில் தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 05 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இன்னாள் வெளியிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

30/8/2019
செயலாளர்.

3/8/19

பெறுநர்
1.திரு. K.R. நடராஜன்,
212, 6–வது கிராஸ்,
ஹெரிடேஜ் ஜெயேந்திரா நகர்,
செம்பாக்கம்,
சென்னை – 600 073
2.திரு.டி.குணசேகரன்,
செயல் அலுவலர்,
மாங்காடு பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்.
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.